# இடர் ஆபத்துக் குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் தொடர்பாக இலங்கை சிறுவர்களின் பிரகடனம்

## சிறுவர்களாலே சிறுவர்களுக்கான பிரகடனம்.

### இது மொத்தத்தில் எதை பற்றியது?

இலங்கையின் அமைவிடம், அதன் தரைத்தோற்ற அமைப்புக்கள், மலைகள், ஆறுகள் மற்றும் அயனமண்டல காலநிலை நிகழ்வுகள் போன்ற காரணங்களால் நாம் கடுமையான மழைவீழ்ச்சி, வெள்ளங்கள், நிலச்சரிவுகள் போன்ற சீரற்ற காலநிலை நிகழ்வுகள் மற்றும் இயற்கை அழிவுகளுக்கு முகங்கொடுக்கிறோம். நீண்டகாலமாக எமது காலநிலையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் எமக்கு பழக்கப்பட்டுள்ள காலநிலை போக்குளை மாற்றியுள்ளன. அத்துடன், எமது நலனகளை பாதிக்கின்ற வித்தியாசமான, அடிக்கடி மாறுகின்ற, சீரற்ற காலநிலையை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தீவிர காலநிலை நிகழ்வுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் அதிகரிக்கும் போது அவற்றுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் நாம் எம்மை தயார்படுத்திக் கொள்ளாதிருந்தால் அதிகமான குடும்பங்களும் சிறுவர்களும் பாதிக்கப்படுவதை காண்கிறோம். இது எமது நலன்களை பாதிக்கும். ஏனெனில், நாம் எமது நலன்களுக்காக எமது பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் மூத்தோரிலேயே தங்கி வாழ்கிறோம். இத்தகைய இயற்கை அழிவுகளின் போது எமது சில முக்கிய தேவைகள் நிறைவேறுவதில்லை என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம். பெரும்பாலும் நீண்ட காலத்துக்கு பாடசாலைக் கல்வியை கைவிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஒரு பேராபத்தின் போது சிறுவர் பாதுகாப்பு சேவைகளில் இடைவெளிகளை அவதானிக்கிறோம். எமது சக சகோதரர்களும் சகோதரிகளும் துயருறுவதை காண்கிறோம். ஒரு பேராபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு, பாதுகாப்பான நீர் மற்றும் சிறந்த சுகாதார வசதிகள் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன. தீவிர காலநிலை மற்றும் இடர் நிலை என்பது எமது பெற்றோருக்கு தமது வேலைகளை, பணிகளை நிறைவேற்ற முடியாமை, எமது வாழ்வாதாரங்களை இழத்தல் மற்றும் எமது குடும்பங்கள் வழமையான வருமானங்களை இழத்தல் என்பனவாகும். இவ்வாறு வருமானம் இழந்தால் நாம் நீண்டகாலத்துக்கு அதன் பாதிப்புக்களை உணர்கிறோம்.

### எமது வகிபாகம் என்ன?

இலங்கையின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF), வர்ல்ட் விஷன் லங்கா (World Vision Lanka) மற்றும் சிறுவர் நிதியம் ஸ்ரீலங்கா (ChildFund Sri Lanka) ஆகிய நிறுவனங்கள் இடர் நிலைமைகள் சிறுவர்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை விளங்கி இடர் ஆபத்து குறைப்பு எதிர்ச்செயலாற்றல் நடவடிக்கைகளில் சிறுவர்களின் அக்கறைகளும் தேவைகளும் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டுமென தீர்மானித்துள்ளன. அதாவது, இடர் ஆபத்து குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் தொடர்பான திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் செயற்பாடுகளில் சிறுவர்களின் பங்கேற்பினை உறுதிப்படுத்துவதாகும். அந்த வகையில், எம்மில் 350 பேருக்கு இந்த அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றவும் சிறுவர்களின் பார்வையில் இடர் நிலைமைகளின் விளைவுகளை அவர்களுக்கு எடுத்து கூறவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன், எமது கிராம மட்டத்தில் திட்டமிடுவதற்கு நாங்கள் அவர்களுக்கு உதவினோம்.

மாற்றத்தின் முகவர்கள் என்ற வகையில் எமது முக்கிய வகிபாகத்தை நிறைவேற்றியதோடு இயற்கை அனர்த்தங்கள் எமது வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தை குறைக்கவும் இடர் நிலைமையில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் கல்வியில் இடைவெளிகள் இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தவும் ஆறு தீர்மானங்களுடன் ஒரு சமவாயத்தை விருத்தி செய்துகொள்வதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொண்டோம்.

செயலார்வத்துடன் பங்கேற்கும் போது இடர் ஆபத்தினை எவ்வாறு குறைத்துக்கொள்ளலாம் என்றும் இடர் நிலைமையின் போது அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்றும் எமது சமூகங்களில் எவ்வாறான காலநிலை மாற்ற நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என்றும் சிறந்ததொரு விளக்கம் கிடைப்பதுடன், எல்லாவற்றுக்கும் மேலாக எமது எதிர்காலத்தில் செல்வாக்கு செலுத்த எமக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என உணர்கிறோம்.

### இடர் ஆபத்து குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் என்பது என்ன?

இடர் ஆபத்து குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் என்பது ஒரு இடர் நிலைக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் என்றும் அதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்யலாம் என்றும், மேலும் அத்தகைய இடர்கள் மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்களை எவ்வாறு குறைக்கலாம் என்றும் சிறப்பாக திட்டமிடுவதற்காக நாடுகளால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையே குறிக்கும். இடர் ஆபத்து குறைப்பானது, அனர்த்தத்தினால் பாதிப்புறக்கூடிய அல்லது பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் இடர் நிலைமை நாட்டின் மீதும் பொருளாதாரத்தின் மீதும் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் பற்றிய ஆய்வுகளை நடாத்தி அத்தகைய தாக்கங்களை குறைப்பதற்கான திட்டங்களை முன்வைக்கின்றது. அதேவேளை, காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கடைதலானது ஒரு நாடு எவ்வாறு காலநிலை மீது (கைத்தொழில், விவசாயம் அல்லது வீடமைப்பு போன்ற திட்டங்களுக்கு காடுகளை அழிப்பது சிறந்த உதாரணம்) எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துவதென்றும், காலநிலையில் நிகழும் மாற்றங்கள் எமது வாழ்வில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துவதென்றும் ஆய்வு செய்வதுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்த ஆய்வுகளின் தகவல்களை பயன்படுத்துகின்றது.

மாற்றத்தின் முகவர்கள் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களே என 2015 – 2030 இடர் ஆபத்து குறைப்புக்கான சென்டால் வரைவுத்திட்டம் மற்றும் பாரிஸ் உடன்படிக்கை போன்ற சர்வதேச வழிகாட்டல்கள் மற்றும் உடன்படிக்கைகள் எடுத்துக்காட்டுவதுடன், இடர் ஆபத்து குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதலில் சிறுவர்களின் பங்களிப்பினை உள்ளடக்கும் விதத்தில் அவர்களுக்கு சந்தர்ப்பத்தையும் எவ்வாறு சிறப்பாக செய்ய வேண்டுமென்ற மாதிரியையும் வழங்குமாறு ஊக்குவிக்கின்றன.

இலங்கையிலும் அத்தகைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பு, அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகங்கள் போன்ற பல்வேறு அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கத்தினால் அத்தகைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.



# இடர் ஆபத்துக் குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் தொடர்பான இலங்கை சிறுவர் பிரகடத்தின் தீர்மானங்கள்

## உறுப்புரை 1

### சகல சிறுவர்களுக்கும் அனைத்து காலங்களிலும் பாதுகாப்பானதொரு சூழலில் தொடர்ச்சியாக கல்வி கிடைக்க வேண்டும்.



சகல சிறுவர்களுக்கும் தடங்கலற்ற, பாதுகாப்பான சூழலில் வழங்கப்படுகின்ற, இடர் தயார்நிலை மற்றும் உயிர் காத்தல் திறன்கள் தொடர்பாக இன்றியமையாத தகவல்களை உள்ளடக்கிய கல்வியை பெற்றுக்கொள்வதற்கான உரிமையை ஏற்றுக்கொள்ளல்.

அதாவது :

- சீரற்ற காலநிலை நிகழ்வுகள் மற்றும் அனர்த்தங்களில் கூட எமக்கு தொடர்ச்சியாக பாடசாலைக்கு செல்ல முடியும்.
- எமது பாடசாலைகள் பாதுகாப்பாக இருக்குமென்பதோடு நாம் எவ்வகையான இயற்கை அனர்த்தங்களையும் எதிர்கொள்ள தயாராக இருப்போம்.
- எமக்கு பாடசாலைக்கு செல்ல சூழல்-நேய மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து முறைமை இருக்கும்.
- எமக்கு சிறந்த சுகாதார பராமரிப்பு கிடைக்கும்.
- பாடசாலையில் காலநிலை மாற்றம், இயற்கை அனர்த்தங்கள், அனர்த்த நிலைமையின் போது எவ்வாறு தயார்நிலையிலும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டுமென கற்றுக்கொள்வதுடன் மாறும் காலநிலைக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான திறன்களையும் பெற்றுக்கொள்வோம்.

## உறுப்புரை 2

### இடர் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றத்துடன் இசைவாக்கமடைதல் தொடர்பாக திட்டங்களை தயாரித்து அமுல்படுத்தும் போது சிறுவர்களின் கருத்துக்கள், ஆர்வங்கள் மற்றும் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பது



இடர் முகாமைத்துவம், ஆபத்து-குறைப்பு மற்றும் காலநிலை மாற்ற மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்களை விருத்தி செய்யும் போது சிறுவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல். இவ்வாறு கொள்கைகள் மற்றும் திட்டங்களை விருத்தி செய்யும் போது கவனத்திற்கொள்ளும் அனைத்து அம்சங்களிலும் சிறுவர்களின் ஈடுபாடு அவசியமானதென ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு தேவையான தகவல்களை வழங்கவும் வேண்டும்.

அதாவது :

- காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் மற்றும் இடர் ஆபத்து குறைப்பு நடவடிக்கைகளை விருத்திசெய்ய எமது அறிவினை பயன்படுத்திக்கொள்வோம்.
- அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றத்துக்காக எமது நாட்டின் தயார்நிலை தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும் போது நாம் ஒரு தரப்பினராக இருப்போம்.
- இடர் ஆபத்து குறைப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நாம் உதவிசெய்வோம்.

உறுப்புரை
3

## அனைத்து அபிவிருத்தி பணிகளும் நிலைபேறாக இருக்க வேண்டுமென்பது



புத்தாக்க, விபரமறிந்த மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவித்தல். அபிவிருத்திப் பணியில் சூழல் மற்றும் ஆபத்து குறைப்பு நோக்குகளை இணைத்துக் கொள்வதுடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைபேறான சுற்றுச்சூழலை சமப்படுத்துவதற்கு புதிய வழிமுறைகளை ஊக்குவித்தல்.

அதாவது :

- நிலைபேறான அபிவிருத்திக்கு ஆதரவு திரட்ட நாம் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறோம்.
- அபிவிருத்தித் திட்டங்களில் நாம் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறோம்.
- அனர்த்த ஆபத்து மற்றும் அது சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை கருத்திற்கொண்டு செயற்படுத்துகின்ற அபிவிருத்திப் பணிகளுக்காக நாம் ஆதரவு திரட்டுவோம்.
- இடர் ஆபத்து குறைப்பு, காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் மற்றும் அபிவிருத்திப் பணிகளை ஒன்றிணைக்கும் விடயத்தில் புத்தாக்க சிந்தனைகளை பிரயோகிப்பதற்கு நாம் ஒத்துழைப்பினை வழங்குவோம்.
- நிலைபேறான அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகளை செயற்படுத்தும் போது சமூக மட்ட நடத்தை மற்றும் மனப்பாங்கு மாற்றத்தை ஊக்குவிப்பவர்களாக இருப்போம்.

## அனர்த்த முன்னறிவிப்பு முறைமைகளை விருத்தி செய்யும் போது சிறுவர்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

உறுப்புரை
4

அனர்த்த முன்னறிவிப்பு முறைமைகள், வெளியேற்றல் திட்டங்கள், முறைமையின் குறைபாடுகளை மதிப்பிடுதல் மற்றும் மிகச்சரியான நடவடிக்கைகளை அமுல்படுத்தல் உள்ளடங்கலாக அனர்த்தத்துக்கு முகங்கொடுப்பதுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை திட்டமிடும் போது சிறுவர்கள், சமூகங்கள் மற்றும் சமூகக் குழுக்களை ஈடுபடுத்திக்கொள்ளல்.

அதாவது :

- முன்னறிவிப்பு முறைகள் மற்றும் வெளியேற்றல் திட்டங்களை வடிவமைக்கும் செயற்பாடுகளில் நாம் பங்கேற்போம்.
- தற்காலிக வெளியேற்றல் பகுதிகளை நிறுவும் செயற்பாடுகளில் நாம் பங்கேற்போம்.
- தற்போது செயற்பாட்டிலுள்ள முன்னறிவிப்பு முறைகளை மதிப்பிடவும் தேவைப்படின் சரியான நடவடிக்கைகளை முன்மொழியவும் நாம் உதவுவோம்.



## உறுப்புரை 5

## அனர்த்த நிலைமைகள் மற்றும் அவசர எதிர்ச்செயலாற்றலின் போது அனைத்து சிறுவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இடர் தவிர்ப்பு மற்றும் எதிர்ச்செயலாற்றும் நடவடிக்கைகளை நிறுவும் போது சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். இங்கு குழந்தைகள், கட்டிளமைப்பருவ பெண் பிள்ளைகள், மாற்றுத்திறனுள்ள சிறுவர்கள் மற்றும் அவசர நிலைமையின் போது விஷேட தேவைகள் தேவைப்படுகின்ற சிறுவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக வலியுறுத்தப்படும். இம்முயற்சிகளில் அனர்த்த மற்றும் அவசர நிலைமைகளின் போது பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனுடைய சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் சட்ட முறைமைகள் போதியளவு கருத்திற்கொள்ளப்படும்.



அதாவது, ஒரு அவசர நிலைமையின் போது,

- சிறுவர் பாதுகாப்பு முன்னுரிமைப்படுத்தப்படும்.
- சிறுவர் உரிமைகள் மற்றும் அந்தஸ்த்து முன்னுரிமைப்படுத்தப்படும்.
- சிறுவர்களின் வயது, ஆண், பெண் பால்நிலை, மதம், மாற்றுத்திறன்கள் மற்றும் விஷேட தேவைகள் என்பவற்றை கருத்திற்கொள்ளாது தவிர்ப்பு மற்றும் எதிர்ச்செயலாற்றல் நடவடிக்கைகளில் அனைத்து சிறுவர்களும் உள்ளடக்கப்படுவார்கள்.

## உறுப்புரை 6

## அனர்த்தத்தில் பாதிக்கப்படும் அனைத்து குடும்பங்களுக்கும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக நிதியுதவி கிடைக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களால் பொருளாதார இழப்புக்களுக்கு முகங்கொடுக்கும் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை பாதுகாக்கின்ற சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சமவாய்ப்புக்கள் வழங்கப்படும்.



அதாவது :

- அனர்த்தத்தின் போது எமது பெற்றோரின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்துக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

ChildFund Sri Lanka

World Vision

පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்
Department of Probation and Child Care Services

unicef
for every child
සෑම දරුවෙක් වෙනුවෙන්ම
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்